**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No.58 /2024**

வாக்குமூலம்: வா.சா.1 – வடிவேல்

**04.02.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்குச் சொத்தில் சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனக்குத் தான் சொந்தமானது என்று எந்த பரிகாரமும் வழக்கில் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் காலியிடமாக கொடுத்த இடத்தில் 1ஆம் பிரதிவாதி ரூ.10 இலட்சம் செலவு செய்து சுமார் 5 வருடங்களுக்கு முன்பிருந்து குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தான் அங்கு குடிசையமைத்து குடியிருந்து வந்தேன். நான் மேற்படி காலியிடத்தில் கிரையம் செய்து கொடுப்பதாக சொல்லியதாக 1ஆம் பிரதிவாதி அங்கு செலவு செய்து குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. என்னிடம் குடியிருப்பதற்காக கேட்டதால் நான் குடியிருக்க அனுமதித்தேன். இந்த பிரச்சனை சம்பந்தமாக காவல் நிலையத்தில் 1ஆம் பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்து விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்ததில் மேற்படி 1ஆம் பிரதிவாதியின் செலவுத் தொகையை நான் செலுத்தி வைப்பதாக கூறியுள்ளேன் என்றால் இல்லை. நான் அங்கு செல்லவில்லை. நான் காவல் நிலையம் செல்லவில்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதிக்கு 3 பெண் குழந்தைகள் என்றால் சரிதான். 3 பெண் குழந்தைகளுக்கு மேற்படி இடத்தில் கட்டப்பட்ட வீட்டில் தான் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் கிரையம் வாங்கிய 1 வருடத்திலிருந்து பிரதிவாதிகள் தான் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் இல்லை. பல வருடங்கள் கழித்து தான் பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருக்க வந்தார்கள். தாவா சொத்தின் தற்போது வரை பிரதிவாதிகள் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி